[1990 மார்ச் 22

திரு. ஏ. கோதண்டம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய குணக்கரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள எட்டிக்குட்டி மேடு கிராமத்தில் உள்ள வெள்ளக் கால்வாய்க்குத் தடுப்பு அணை கட்டவும் கால்வாயை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரு திட்டங்களை நிறைவேற்று வதற்காக அரசு ஒரு ஆய்வு அறிக்கையைத் தயார் செய்து இருக்கிறது. குணக்கரம்பாக்கத்திற்கு ரூ. 8.75 லட்சத்திலும், எட்டுக்குட்டிமேட்டுக்கு ரூ. 9.12 லட்சத்திலும் ஒரு திட்டம் தயாரித்து அவை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அது அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு, அரசு இதைக் கட்டுவது குறித்து பரிசீலிக்கும்.

சத்துணவு பொறுப்பாளர் நியமனக் குழு

*3561 திரு. அ. மாரிமுத்து:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

சத்துணவு பொறுப்பாளர் நியமனக் குழுவில் ஒன்றிய, ஊராட்சித் தலைவர்களோடு சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்துணவுப் பொறுப்பாளர் நியமனக் குழுவில், அலுவல் சார்பற்ற யாரையும் நியமிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களை, ஒன்றியத்தின் பெருந்தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் திடீரென்று சோதனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.